**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.211/2021**
**Prosecution Witnesses: 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சந்தானகுமார்** | Caste | : |
| Father Name/ Husband Name | : **தட்சணாமூர்த்தி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(25.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் மதுரை எஸ்.ஆலங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பிளம்பிங் பணி செய்து வருகிறேன். அ.சா.1 கார்த்திஸ்வரி, அ.சா.3 கோடிஸ்வரி ஆகியோர்கள் எனது சித்தப்பா மகள்கள் ஆவார். ஆஜர் எதிரிகள் 4 பேரையும் எனக்கு தெரியும். எதிரிகள் 5 பேரில் செண்பகவள்ளி என்பவர் இறந்துவிட்டார்., இன்று ஆஜராகியுள்ள 4 பேர்கள் தர்மர், நாகு என்ற நாகேந்திரன், அழகுலட்சுமி, பாக்கியலட்சுமி ஆகியோர்கள் ஆவார்கள். சாமி கும்பிடுவதற்காக சிவரக்கோட்டையில் உள்ள எங்கள் பூர்வீக வீட்டிற்கு நாங்கள் வருவோம். 13.03.2021 அன்று அவ்வாறே சாமி கும்பிடுவதற்காக எங்கள் பூர்வீக வீட்டிற்கு சென்றிருந்தோம். குலசாமியை கும்பிட்டுவிட்டு அங்குள்ள பூர்வீக வீட்டிற்கு சென்றும் சாமி கும்பிடுவதும் வழக்கம். அவ்வாறு செல்லும் எங்கள் பூர்வீக வீடு இடிக்கப்பட்டு தரைமட்டமாக இருந்தது. இறந்துபோன செண்பகவள்ளியிடம் எதற்காக வீட்டை இடித்திர்கள் என கேட்டதற்கு ஆஜர் எதிரிகள் தர்மர் என்பவரும் நாகு என்பவரும் என்னை கையால் பிடதியில் அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். எதிரிகள்

அழகுலட்சுமியும் பாக்கியலட்சுமியும் சேர்ந்து நான் அணிந்திருந்த கைலியை கழற்றிவிட்டு விலக்குமாற்றால் மானபங்கம் படுத்தினார்கள். சொத்தை கேட்டு வ ந்தால் உன்னை கொன்றுவிடுவோம் என அனைத்து எதிரிகளும் மிரட்டினார்கள். அதை தடுக்க வந்த கார்த்திஸ்வரி, கோடிஸ்வரி மற்றும் எனது சித்தப்பா தங்கராஜ் மற்றும் சித்தி செல்வி ஆகியோர்களையும் எதிரிகள் அடித்து காயப்படுத்தினார்கள். யார் யாருக்கு எந்த இடத்தில் அடிப்பட்டது என்று தற்சமயம் நினைவு இல்லை. எனது தங்கை அ.சா.1 கார்த்திஸ்வரியை திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்று அங்கு முதல் உதவி சிகிச்சை கொடுக்கப்பட்டு அங்கு இருந்து மேல் சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனை அனுப்பி வைத்தார்கள். அங்கு அ.சா.1 ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தார். எனக்கு பிடதியில் ஊமைக்காயம் ஏற்பட்டு வலி இருந்தது. நான் மருத்துமனைக்கு செல்லவில்லை. இதுசம்பந்தமாக கோடிஸ்வரி என்பவர் புகார் கொடுத்தார். காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யவில்லை. அதன் பிறகு மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தும் அங்கு இருந்து கள்ளிக்குடி காவல் நிலையத்திற்கு புகார் அனுப்பப்பட்டு போலிசார் வழக்கு பதிவு செய்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது ஆஜர் எதிரிகள் அனைவரும் கலக கூட்டமாக ஒன்று சேர்ந்து எங்கள் தரப்பினரை அசிங்கமாக பேசி அ.சா.1 ஐ அடித்துக்காயம் ஏற்படுத்தி பெண் என்றும் பாராமல் வன் கொடுமை செய்து என்னையும் கோடிஸ்வரியையும் அடித்துக்காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் கு.வி.**

எதிரிகள் அனைவரும் எனது உறவினர்கள் என்றால் சரிதான். இறந்துபோன செண்பகவள்ளி என்பவர் எனது அம்மாயி உறவு முறையாகும். எனது அப்பா காலத்திலேயே பூர்வீக வீட்டை எதிரிகளுக்கு எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. சுமார் 60 வருட காலமாக இறந்துபோன

செண்பகவள்ளி தான் வீட்டை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. வீடானது பழுதடைந்து போனதால் தான் இறந்துபோன செண்பகவள்ளி கேட்டுக்கொண்டதின் பேரில் எதிரிகள் இடித்தார்கள் என்றால் சரியல்ல. நான் வீட்டை இடிக்கும் போது ஊரில் இல்லை. மறுநாள் தான் சிவரக்கோட்டைக்கு வந்தேன் என்றால் சரிதான். நான் தான் போய் இறந்துபோன செண்பகவள்ளியிடம் ஏன் இடித்தீர்கள் என்று கேட்க போனேன் என்றால் சரிதான். நான் தான் செண்பகவள்ளியிடம் சென்று ஏன் இடித்தீர்கள் என்று பிரச்சினை செய்தேன் என்றால் நான் மட்டும் தான் சென்றேன். மற்றவர்கள் அடிபட்ட பிறகு வந்தார்கள். பூர்வீக வீடானது யார் பெயரில் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆனால் அதுசம்பந்தமாக நான் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரவில்லை என்றால் எனக்கு வசதி இல்லை. எனக்கு எவ்வித ஆதாரம் இல்லை என்பதால் தான் சிவில் வழக்கு போடவில்லை என்றால் சரியல்ல. எங்கள் மீது தான் முதலில் வழக்கு போடப்பட்டது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக தான் நாங்கள் எதிரிகள் மீது பொய்யான சங்கதிகளுடன் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. போலிசுக்கு நாங்கள் அழுத்தம் கொடுத்து தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்குக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.211/2021**
**Prosecution Witnesses: 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : **தங்கராஜ்** | Caste | : |
| Father Name/ Husband Name | : **சந்தானம்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(25.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் சிவரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பணி செய்து வருகிறேன். கார்த்திஸ்வரி எனது கடைசி மகள் ஆவார். கோடிஸ்வரி மூத்த மகள், சந்தனகுமார் எனது அண்ணன் ஆவார். ஆஜர் எதிரிகள் தர்மசுந்தரம், அழகுலட்சுமி, பாக்கியலட்சுமி, மற்றொரு எதிரி பெயர் நாகு என்று தான் தெரியும். அவரது முழு பெயர் எனக்கு தெரியாது. இறந்துபோன எதிரி செண்பகவள்ளி என்பவர் எனது தந்தை உடன்பிறந்த 2 வது சகோதரி ஆவார். கடந்த 23.03.2021 அன்று எங்கள் ஊரில் தென்வடல் வீதியில் உள்ள இருளாயி அம்மன்கோவில் அருகே அ.சா.4 சந்தனகுமார் என்பவர் ஊருக்கு சாமி கும்பிட்டுவிட்டு எங்கள் ஊரில் வந்து எங்கள் பூர்வீக வீட்டில் விளக்கு போடுவதற்காக வந்த போது மாலை 3.30 மணியளவில் மேற்படி பூர்வீக வீடானது இல்லாமல் இருந்தது. இடித்து தரைமட்டமாக ஆக்கப்பட்டிருந்தது. அந்த பூர்வீக வீடு இருந்த இடத்தில் உள்ள இடிபாடுகளை டிராக்டர் மூலம் அள்ளிக்கொண்டிருந்தார்கள். டிராக்டர் ஓட்டுனரிடம் அ.சா.4 சந்தனகுமார் எதற்காக வீட்டை இடித்தீர்கள் என கேட்ட

போது நான் சந்தனகுமாரை அழைத்துக்கொண்டு அந்த இடத்தை விட்டு கிளம்பினோம். அப்போது  எதிரி அழகுலட்சுமி என்பவர் ஓடி வந்து சந்தனகுமார் என்பவரது இருசக்கர வாகனத்தில் உள்ள சாவியை பிடுங்கி கொண்டு செல்போன் மூலம் அவரது உறவினர்களை கூப்பிட்டார். அப்போது எதிரி தர்மசுந்தரம் என்பவர் என்னையும் சந்தனகுமாரையும் தாக்க முயன்றார். அப்போது அழகுலட்சுமி என்பவர் துடப்ப கட்டையால் என்னையும் அ.சா4 சந்தனகுமாரையும் தாக்கினார். நான் தடுக்க சென்றேன். அப்போது எதிரிகள் அனைவரும் சேர்ந்து என்னையும் எனது மகன் அ.சா.4 யும் கீழே தள்ளிவிட்டு என்னை கொடாப்பிடியாக (வலுவாக) பிடித்துக்கொண்டு  அழகுலட்சுமி என்பவர் என்னுடைய வேட்டியையும் உருவினார். நான் அவமானப்படுத்தப்பட்டேன். எனது உள்ளாடைகளும் கிழிக்கப்பட்டது. எனவே நான் வீட்டிற்குசென்று வேறு வேஷ்டி கட்டிக்கொண்டு வந்தேன். விலக்க சென்ற  எனது மகள்களையும், எனது மனைவி செல்வியையும் எதிரிகள் ஆஜர் 1வது எதிரியும், 2 வது எதிரியும் சேர்ந்து எனது  மனைவி செல்வியை அடித்தார்கள்.  எனது மகள்களையும் துன்புறுத்தினார்கள். அவர்களை கட்டையாலும் செங்கலாலும் அடித்துக்கீழே தள்ளப்பட்டார்கள். அதில் எனது மகள் அ.சா.1 கார்த்திஸ்வரிக்கு தலையில் காயம் ஏற்பட்டது. அ.சா.1ன் ஒரு காது தற்போது சரியாக கேட்கவில்லை. அதன் பிறகு 108 ஆம்புலன்சு மூலம் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் . அங்கு இருந்து மேல் சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சைக்காக  சேர்ந்தார். அங்கு அ.சா.1 ஒரு வாரத்திற்கு மேலாக சிகிச்சையில் இருந்தார். சம்பவம் பற்றி கள்ளிக்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அவர்கள் வழக்கு பதிவு செய்யவில்லை. அதன் பிறகு மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தும் அங்கு இருந்து கள்ளிக்குடி காவல் நிலையத்திற்கு புகார் அனுப்பப்பட்டு போலிசார் வழக்கு பதிவு செய்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போதும் சிவரக்கோட்டையில் தான் குடியிருந்து வருகிறேன் எதிரிகளும் சிவரக்கோட்டையில் தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் தர்மர், பாக்கியலட்சுமி, வெளியூரில் இருக்கிறார்கள். மற்றவர்கள்

சிவரக்கோட்டையில் தான் குடியிருக்கிறார்கள். இறந்துபோன செண்பகவள்ளி எனது அப்பாவுடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். செண்பகவள்ளியை எனது அப்பா காலத்திலேயே திருமணம் செய்து கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். எனது அப்பா காலத்திலேயே பூர்வீக வீட்டை செண்பகவள்ளி பெயரில் எழுதி கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. செண்பகவள்ளி என்பவர் வறுமையின் காரணமாக அந்த வீட்டில் குடியிருக்க வைத்துவிட்டார்களா என்றால் அது அவர்களுக்குள் பேசி தற்காலிகமாக இருக்க வைத்துவிட்டார்கள். அது பூர்வீக என் தகப்பனார் கட்டிய வீடு. நான் பார்க்கும் போது செண்பகவள்ளி அங்கு தான் குடியிருந்து வந்தார்கள். எதிரிகளும் அங்கு தான் பிறந்தார்கள். அவர்கள் பெயரில் தான் கரண்ட் பில், வீட்டு ரசிது போன்றவை இறந்துபோன செண்பகவள்ளி பெயரில் தான் உள்ளது என்றால் அவர்கள் போலியாக ஆவணங்களை தயார் செய்து பூர்வீக சொத்தை மாற்றிவிட்டார்கள். பழமையான வீடு என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் ஊரில் இல்லை. ஆனால் அதுசம்பந்தமாக நான் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரவில்லை என்றால் எனக்கு வசதி இல்லை. எனக்கு எவ்வித ஆதாரம் இல்லை என்பதால் தான் சிவில் வழக்கு போடவில்லை என்றால் சரியல்ல. எங்கள் மீது தான் முதலில் வழக்கு போடப்பட்டது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக தான் நாங்கள் எதிரிகள் மீது பொய்யான சங்கதிகளுடன் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. போலிசுக்கு நாங்கள் அழுத்தம் கொடுத்து தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்குக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

நான் எப்போது எனது மகளை மருத்துவமனைக்கு கூட்டி சென்றோம் என்றால் மாலை 6 மணிக்கு கூட்டி சென்றோம். மருத்துவ மனையில் யார் அடித்தார்கள் என்ற விபரங்கள் சொன்னார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு எதுவும் சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் இல்லை. எனது மனைவிக்கும் சிகிச்சை எடுக்கவில்லை. எனது அண்ணன் மகனுக்கும் சிகிச்சை எடுக்கவில்லை. மருத்துவமனையில் இருந்து எனது

மகள் மூலம் புகார் கொடுத்தோம். மருத்துவமனையில் இருந்து வந்த பிறகு தான் எதிரிகள் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை.** இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.211/2021**
**Prosecution Witnesses: 6**

| | | | |
|---|---|---|---|
| Name | : நீலகண்டன் | Caste | : |
| Father Name/ Husband Name | : அய்யத்தேவர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(25.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் சிவரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். போலிசார் கேட்டுக்கொண்டதின் பேரில் மேற்படி கையெழுத்தை போட்டேன். எனக்கு என்ன நடந்தது என்று தெரியாது. மேற்படி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி:**

நான் போலிசார் விசாரணையின் போது சம்பவ இடத்தை பார்வை இட்டு வரைபடம் வரைந்து அது சமயம் தயார் செய்து பார்வை மகசரில் கையொப்பம் செய்ததாக சொல்லி விட்டு தற்சமயம் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.211/2021**
**Prosecution Witnesses: 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜேஸ்வரி | Caste | : |
| Father Name/ Husband Name | : லோகநாதன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(25.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் சிவரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி:**

நான் போலிசார் விசாரணையின் போது சம்பவ இடத்தை பார்வை இட்டு வரைபடம் வரைந்து அது சமயம் தயார் செய்து பார்வை மகசரில் கையொப்பம் செய்ததாக சொல்லி விட்டு தற்சமயம் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி.** இல்லை